Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

# DIOCESE OF MARTHANDAM
## Priestly Ordination

On Saturday 15th April 2023 at 2.30 pm
at Our Lady of Assumption Malankara Catholic Church,
Mariagiri (MCC Campus)



Dn. Ajesh L., Dn. Anish J., Dn. Siljin J., Dn.Vibin Raj A., Dn. Steephan John

**மார்த்தாண்டம் மறைமாவட்டம் சார்பாக**
**வாழ்த்துக்களும்... ஜெபங்களும்...**

To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin
## Diocese of Marthandam
### மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



## உயிர்ப்புத் திருநாள்

ஏப்ரல் 09

மலர் 20 ஏப்ரல் 2023 இதழ் 04

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.04.2023 | Saturday | 4.30pm<br>6.00pm | Community Hall Blessing<br>Altar Blessing | Kattuvilai<br>Mathar |
| 02.04.2023 | Sunday | | Palm Sunday | Cathedral - Marthandam |
| 06. 04.2023 | Thursday | 4.00pm | Maundy Thursday | Mathar |
| 07. 04.2023 | Friday | 8.00am | Good Friday | Chellamkonam |
| 08.04. 2023 | Saturday | 7.00pm | Easter | Chellamkonam |
| 10.04.2023 | Monday | <br><br>3.30pm | Marriage<br><br>UCC | Cathedral - Marthandam<br>Anchukootuvilai |
| 11.04.2023 | Tuesday | <br>10.30am | Holy Mass<br>Graduation Day - MCC | Mar Ephream Nagar<br>Mariagiri |
| 12.04. 2023 | Tuesday | 6.45 am | Comm.of Bishop Lawrence Mar Ephraem<br>School Day | Cathedral - Marthandam<br>Ambilikonam |
| 13.04.2023 | Thursday | | Jubilee - MCC<br>School Day | Mariagiri<br>Chathancode |
| 14.04.2023 | Friday | | UCC – Women's Day | Azhagiamandapam |
| 15.04.2023 | Saturday | | Ordination | Mariagiri |
| 16.04.2023 | Sunday | | First Mass | Kattuvilai,<br>Marthandam,<br>Manjathoppu,<br>Mariagiri |
| 17.04.2023 | Monday | | First Mass | Kallikulam |
| 21.04.2023 | Friday | | Class - SIC | Kanyakumari |
| 22.04.2023 | Saturday | 6.00pm | Seminary Day | Elavuvilai |
| 23.04.2023 | Sunday | | Holy Mass<br>Holy Mass | Mavelikara<br>Mancadu |
| 24.04.2023 | Monday | | Marriage | Nadaikkavu |
| 25.04.2023 | Tuesday | | Major Seminary Camp | |
| 29.04.2023 | Saturday | | Holy Mass | Kulasekaram |
| 30.04.2023 | Sunday | | Holy Mass<br><br>Holy Mass | Charotukonam - Parasala<br>Chellamkonam |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 ஏப்ரல் 2023 இதழ். 4

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM


*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***
***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***
***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***
***Diocese of Marthandam***





**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165


Cir.No.2/2023 23.03.2023

## CIRCULAR

**"குருவானோரின் குருவானவரே பலிபீடத்தில்**
**ஏவல்செய்த குருக்கள்கருள்வீர் வானக இன்பம்"**

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே, அருட் சகோதரர்களே, அருட்கன்னியர்களே, இறைமக்களே,***

பன்முகத்துறைகளில் பாதம் பதித்தவர் என்று பாருலகம் போற்றும் ஆயர் மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு திருநாளை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 8-ம் நாள் அனுசரிக்கின்றோம். ஆயர் அவர்களுடைய இலட்சிய கனவு என்பது கிறிஸ்துவை அறிவிப்பதாக இருந்தது. இப்பணியை செயல்படுத்த சமூக நலப்பணிகள், ஆரோக்கிய பணிகள், மக்கள் மேம்ப்பாட்டு பணிகள் என திருஅவையின் திருப்பணிகளோடு இணைத்து செயல்படுத்தினார். எனவேத்தான் காலம் கடந்தும் அவருடைய ஆளுமை கலங்கரை விளக்காய் இன்றும் எண்ணற்ற மாந்தர்களுக்கு உந்து சக்தியாக விளங்குகிறது. மலங்கரை கத்தோலிக்கத் திருஅவையில் மறைபரப்புப் பணி வழியாக தனி முத்திரை பதித்தவர் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம். அவரது வாழ்வும் பணியும் நம் மறைமாவட்டத்திற்கு அடித்தாளமாக அமைந்திருக்கிறது. அவர்களை நம் மறைமாவட்டத்தின் முதல் ஆயராகப் வழங்கிய இறைவனுக்கு நன்றி கூறுவோம். இறைவனுக்கும் இறைமக்களுக்குமாக தன் இவ்வுலக வாழ்வை அர்ப்பணித்து நிறைவு செய்த நம் ஆயர் அவர்கள் விண்ணகம் எய்தியதின் 26-ம் ஆண்டு நினைவு திருநாள் இவ்வாண்டு புனித சனிக்கிழமையாக (ஏப்ரல் 8-ம் நாள்) வருவதால் மேதகு ஆயரின் நினைவு பாதையாத்திரையும் நினைவு திருநாளும் ஏப்ரல் மாதம் 11 மற்றும் 12-ம் தேதி நடைபெறும் வகையில் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது. இப்புனித பயணத்தை மலங்கரை

கத்தோலிக்க இயக்கம் (MCA) முன்நின்று வழிநடத்தும். இந்நிகழ்வுகளில் நமது மறைமாவட்டத்தின் அனைத்து குருக்களும், அருட்கன்னியர்களும், இயக்கங்களின் உறுப்பினர்களும், இறைமக்களும் கலந்துக்கொண்டு ஆயரின் பரிந்துரை வேண்டி ஜெபித்து இறையாசீர் பெற அன்புடன் அழைக்கின்றேன். ஆயரின் மன்றாட்டு நமக்கு அரணாக அமையட்டும். கீழ்காணும் நிகழ்வுகளோடு அவரது நினைவு திருநாளை நாம் கொண்டாடவிருக்கின்றோம்.

## நிகழ்வுகள்

**11-04-2023 செவ்வாய்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | **காலை செபம், திருப்பலி**<br>மார் எப்ரேம் நகர் (வெள்ளெலும்பு ஆலயம்)<br>**மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**<br>**மேதகு ஆயர் தோமஸ் மார் எவுசேபியுஸ்** |
| காலை 8.30 மணி | : | பாதயாத்திரை ஆரம்பம்<br>(வாகனத்தில் பின்குளம் வந்தடைதல்) |
| காலை 9.30 மணி | : | **பின்குளம்** |
| பிற்பகல் 1.15 மணி | : | **குழித்துறை மார் எப்ரேம் வளாகம்**<br>(மதிய உணவு) |
| மாலை 5.00 மணி | : | **பேராலயம்**<br>(ஆயரின் நினைவிடம் சென்றடைதல்)<br>**மாலை செபம், தூப மன்றாட்டு** |

**12-04-2023 புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 6.45 மணி | : | **காலை செபம்** |
| காலை 7.00 மணி | : | **நினைவுத்திருப்பலி**<br>**பொதுக்கூட்டம்**<br>**தூப மன்றாட்டு** |

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*

✝ **மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்



# குருக்கள் செய்திகள்

இம்மாத குருக்களுக்கான தியானம் 07-03-2022 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து அருட்தந்தை காட்வின் (குழித்துறை மறைமாவட்டம்) அவர்களால் வழிநடத்தப்பட்டது. தியானத்தை தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் குருக்கள் சங்கம் நடைபெற்றது. இதில் மறைமாவட்டத்தில் உள்ள அருட்தந்தையர்கள் பங்கெடுத்து சிறப்பித்தார்கள்.

## அறிவிப்பு

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை பெனடிக்ட் ஆன்றோ (வயது 29) அவர்கள் பற்றி எழுந்த பல்வேறு புகார்களின் அடிப்படையில் அவர்கள் 16.03.2023 முதல் மறைமாவட்டத்திலுள்ள, குருத்துவம் சார்ந்த அனைத்து பணி பொறுப்புகளிலிருந்தும் விலக்கப்படுகிறார் என்று இதன்வழி அறிவிக்கப்படுகிறது.

இறையுறவில்,

✝ **மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

## திருமண ஆயத்தப்பயிற்சி

**ஏப்ரல்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 14, 15 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மேரி மக்கள் துறவற சபை

**Eucharistic Ministrees-க்கான அனுமதி வழங்குதல்**

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும் தந்தையுமான மோறான் மோர் பெசலியோஸ் கிளீமிஸ் காதோலிக்க ஆண்டகை அவர்கள் 14.03.2023 அன்று 3-ம் கட்ட Eucharistic Ministrees -க்குள்ள நற்கருணை வழங்குபவர்கள் அனுமதி மற்றும் ஆசீர்வாதத்தை வழங்கினார். இதில் மார்த்தாண்டம் மாகாணத்திலுள்ள 40 அருட்சகோதரிகள் கலந்து ஆசீர்வாதம் மற்றும் அனுமதியை பெற்றார்கள்.

**மறைபரப்பு தளங்கள் சந்தித்தல்**

மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞாலில் அடிகளாரின் விண்ணக வாழ்வின் 40-ம் ஆண்டு நினைவு - றூபி ஜூபிலியை முன்னிட்டு அவர் துவங்கிய மறைபரப்பு தளங்களான உண்ணாமலைக்கடை, தேமானூர், பனச்சமூடு, மார்த்தாண்டம் போன்ற மறைபரப்பு தளங்கள் சந்திக்கப்பட்டு ஆன்மீக வளர்ச்சிக்கு உதவிசெய்து அந்த இடங்களில் மறுமலர்ச்சியை எம் மேரிமக்கள் துறவற சபை அருட்சகோதரிகள் செய்தார்கள். இதில் ஏராளமான அருட்சகோதரிகள் மாகாணத் தலைவிகள், உயர் மாகாண ஆலோசக அருட்சகோதரிகள் கலந்து கொண்டார்கள்.



# MCYM
## Youth Apostolate

**ஆண்டு திட்ட வெளியீடு**

2023 பிப்ரவரி மாதம் 26-ம் தேதி குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து பிற்பகல் 2 மணிக்கு "MCYM ஆண்டு திட்டம் வெளியிடுதல்" மற்றும் இந்த ஆண்டின் 'MCYM THEME வெளியிடுதல்' ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றது. நம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் வருகை தந்து இவற்றை வெளியிட்டு வாழ்த்து தெரிவித்தார். இந்த ஆண்டின் 'MCYM THEME' 'இளையோரே விரைந்து எழுவோம் இணைந்து பயணிப்போம்' என்ற தலைப்பில் அருட்தந்தை விபின்ஸ் அவர்களால் வகுப்பு ஒன்று நடத்தப்பட்டது.

**தலைமைத்துவ பயிற்சி**

இளைஞர்கள் தங்களை ஆய்ந்தறிந்து தங்கள் திறமைகளை வெளிக்கொணரவும் அவற்றைக் கிறிஸ்தவ மதிப்பீடுகளை கொண்டு வளர்த்துக் கொள்ளவும் வேண்டி 'ஆன்மீக மற்றும் தலைமைத்துவ பயிற்சி' வகுப்பானது "Tamil Nadu Jesus Youth" மற்றும் மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கம் இணைந்து மலங்கரை பவனில் வைத்து மார்ச் மாதம் 10, 11, 12 ஆகிய தேதிகளில் நடத்தினர். நம் மறைமாவட்ட மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமை உரையாற்றி துவங்கிவைத்தார்கள். இளையோர்கள் ஜெபங்களிலும், பயிற்சி வகுப்புகளிலும் ஆர்வத்தோடு பங்கெடுத்து சிறப்பித்தார்கள்.

மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

**➲ தவக்கால தியானம் :**

இயேசு கிறிஸ்துவின் கல்வாரி பாடுகளை தியானிக்கும் வகையில் மரியாயின் சேனை சார்பில் தவக்கால தியானமானது கடந்த 25.02.2023 அன்று குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. காலை 9.30 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை நடைபெறற இத்தியானத்தை ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை G. வற்கீஸ் அவர்கள் ஜெபத்துடன் துவக்கி வைத்தார்கள். அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்கள் தியானத்தை மிக சிறப்பாக வழிநடத்தினார். 100-க்கு மேற்பட்ட இறைமக்கள் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்.

**➲ கருத்தாளர் பயிற்சி :**

ரீஜியா சார்பில் நமது கொமித்சிய பொறுப்பாளர்கள் மற்றும் 2 கியூரியா நிர்வாகிகளை உள்ளடக்கிய கருத்தாளர் குழுவின் முதற்கட்ட பயிற்சியானது, 25.02.2023 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை திரித்துவபுரம் தூய மூவொரு இறைவன் அரங்கில் வைத்து நடைபெற்றது. ரீஜியா தலைவர் Br. யூஜின் அவர்கள் இப்பயிற்சியை வழிநடத்தினார்கள்.

**➲ ஆஃக்சேஸ் விழா :**

சேனையின் மிக முக்கிய விழாவான ஆஃக்சேஸ் விழாவானது 12.03.2023 அன்று கிறிஸ்து அரசர் பேராலயம் மார்த்தாண்டத்தில் வைத்து நடைபெற்றது. மேதகு ஆயர் அவர்கள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்கள். கொமித்சிய ஆன்ம இயக்குநர் அருட்தந்தை மைக்கிள் அவர்கள் ஆஃக்சேஸ் விழாவை வழிநடத்தினார்கள். 150 சேனையாளர்கள் கலந்து கொண்டு தங்கள் வாக்குறுதிகளை புதுபித்து கொண்டனர். இறுதியில் அருட்தந்தை அர்னால்ட் டயஸ் அவர்கள் நற்கருணை ஆசீர் வழங்கினார்கள். விழாவுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக ஒழுங்குபடுத்திய Msgr. ஜோஸ் பிறைட், அருட்தந்தை G. வற்கீஸ் மற்றும் மார்த்தாண்டம் சேனையாளர்களுக்கும் நன்றிகள்.

**➲ நன்றிகள் :**

5 ஆண்டுகளுக்கு மேலாக கொமித்சியத்தை மிக சிறப்பாக வழிநடத்தி, எங்களை ஆன்மீக பாதையில் வளரச்செய்த முன்னாள் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை G. வற்கீஸ் அவர்களுக்கு நன்றிகள்.

# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

HOM அலுவலக பணியாளர்கள் மற்றும் ஆர்கனைசர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 02.03.2023 அன்று HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். திருமதி லதா அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். HOM கணக்காளர் திருமதி செல்வி அவர்களால் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் HOM வழியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. குழுக்களின் நிதி ஆதாரத்திற்கான செயல்திட்டத்தை தயாரித்து வழங்கிய அமைப்பாளர்கள் குழுக்களுக்கு ஆடு வளர்ப்பதற்கான நிதி வழங்கப்படும் என இயக்குநர் கூறினார்.

HOM கொட்டாரம் அலகைச் சார்ந்த சுயஉதவிக் குழுக்கள் சார்பாக வருடாந்திர கூட்டம் மற்றும் மகளிர் தின கொண்டாட்டம் 09.03.2023 அன்று தென்தாமரைகுளம் பகுதியில் நடைபெற்றது. HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தலைமை வகித்தார்கள். திருமதி முத்துலெட்சுமி அவர்கள் வரவேற்புரை யாற்றினார்கள். சுயஉதவிக் குழு செயலர் திருமதி லீலா ரமணிபாய் அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார்கள். டாக்டர். சுதன் அவர்கள் மகளிர் தின நிகழ்வுகள் குறித்து உரையாற்றினார்கள். மேலும் தென்தாமரைகுளம் பஞ்சாயத்து உறுப்பினர் திரு. கான்ஸ்டன்டைன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் இக்கூட்டத்தை சிறப்பித்தார்கள். திருமதி புளோறா அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

மார்த்தாண்டம் மறைமாவட்ட நலவாழ்வு அமைப்பான HOM சார்பாக செப்டம்பர் மாதத்தில் 52 நோயுற்ற முதியோர்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் அருட்தந்தை ராபர்ட் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் தாய் சேய் நலத்திட்டம் சார்பாக 30 கற்பிணி பெண்களுக்கு சத்து மாவு வழங்கப்பட்டது.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஸன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது. தற்போது 42 நிரந்தர நோயாளிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் மாதத்திற்குரிய உதவித்தொகை 20.03.2023 அன்று HOM அலுவலக வளாகத்தில் வைத்து அருட்தந்தை ராபர்ட் அவர்களால் வழங்கப்பட்டது. அன்றைய தினம் வெட்டுமணியில் செயல்பட்டுவரும் ஆரோக்யா இயற்கை நலவாழ்வு மருத்துவமனை சார்பாக இயற்கை மருத்துவ முகாம் நடைபெற்றது



# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை ரதீஷ் ரிச்சார்ட்
ஏப்ரல் 03



அருட்தந்தை செலஸ்டின்
ஏப்ரல் 06



பேரருட்தந்தை S. வர்கீஸ்
ஏப்ரல் 23



அருட்தந்தை G. வர்கீஸ்
ஏப்ரல் 23



அருட்தந்தை ஜார்ஜ் தாவரத்தில்
ஏப்ரல் 23



அருட்தந்தை G. ஜீவின் ஜார்ஜ்
ஏப்ரல் 23



அருட்தந்தை வில்பின் விஜு
ஏப்ரல் 23



அருட்தந்தை பீட்டர் ஆனந்த்
ஏப்ரல் 29

# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

### 1. தேசிய மாணவர் படை

மலங்கரை கத்தோலலிக்க கல்லூரி என்.சி.சி சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. கல்லூரி தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் தம்பி தங்ககுமரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். விழிப்புணர்வு பேரணியின் சிறப்புவிருந்தினராக பத்மநாதபுரம் துணைஆட்சியாளர் உயர்திரு கவுசிக் இ.ஆ.ப அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். நல்லதொரு எதிர்காலம் மாணவர்களுக்கு அமைய வேண்டுமென்றால் இளம் சமுதாயம் போதைபொருள் அற்றதாக காணபடவேண்டும் என்றும் போதைபொருள் பயன்பாடு எங்கேயினும் காணப்பட்டால் அதனை உடனடியாக தெரிவிக்கவேண்டும் என்றும் கூறினார்கள். நாகர்கோவில் 11 தமிழ்நாடு படைவீரர்கள் பிரிவுவை சார்ந்த தாகூர் பத்மர்சிங் ஜான்சி மற்றும் காவ் ஜெயக்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். விழிப்புணர்வு பேரணியானது புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி மரியகிரி, புனித எப்ரேம் மேல்நிலைப்பள்ளி சூரியகோடு, புனித பிரான்சீஸ் மேல்நிலைப்பள்ளி வாவறை, ஜானட் மெட்ரிக் பள்ளி முஞ்சிறை மற்றும் அரசுமேல்நிலைப்பள்ளி முஞ்சிறை ஆகிய பள்ளிக்கூடங்களுக்கு சென்று மாணவர்களுக்கு போராத விழிப்புணர்வு வழங்கப்பட்டது. பேரணி ஒழுங்குகளை கல்லூரி நிர்வாகம், தேசிய மாணவர் படைமற்றும் 11 தமிழ்நாடு படைவீரர்கள் பிரிவுவை சார்ந்தவர்கள் செய்திருந்தனர்.

### 2. கணிதவியல் துறை

மலங்கரை கத்தோலிக்க கல்லூரி கணிதவியல் துறை சார்பில் ஒருநாள் தேசீய கருத்தரங்கானது 03.03.2023 அன்று நடைபெற்றது.



கிராப் தேற்றம் எனும் மையக்கருத்தில் நடைபெற்றது. கல்லூரி தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் தம்பிதங்ககுமரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கருந்தரங்கின் சிறப்பு விருந்தினராக காசர்கோடு மத்திய பல்கலைகழகத்தின் கணிதவியல் துறைதலைவர் முனைவர் வில்பிறட் கமலப்பன், புதுச்சேரி பல்கலைகழக கணிதவியல் துறை இணைபேராசியர் அசீர் மற்றும் எர்ணாகுளம் புனித ஆல்பர்ட் கல்லூரி துணைபேராசிரியர் ஆன்றோ அவர்கள் கலந்துகொண்டு கிராப்ட் தேற்றம் பற்றிவகுப்புகளை நடத்தினார்கள். விழா ஏற்பாடுகளை கல்லூரியின் கணிதவியல் துறைசெய்திருந்தது.

### 3. சர்வதேச மகளீர் தினம்

சர்வதேச மகளீர் தினம் 08.03.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் தம்பிதங்ககுமரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கல்லூரி தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். வரவேற்புரையானது முனைவர் ராமபிரியா அவர்களால் கூறப்பட்டது. சிறப்பு விருந்தினராக முஞ்சிறைவட்டார மருத்துவ பிரிவைச் சார்ந்த டாக்டர் அசங்கிளா சங்கீத் அவர்கள் பங்கேற்று பெண்கள் முன்னேற்றம் அடையவும் வேலைவாய்ப்பை உயர்த்தவும் என்னென்ன செய்யவேண்டும் என்று தெளிவாக எடுத்து கூறினார்கள். விழாவின்போது வானமே எல்லை என்னும் மையக்கருத்தில் JCI நாகர்கோவில் நிறுவனத்தில் உள்ள திரு. அகஸ்தா மற்றும் குழுவினர் கலந்துகொண்டு மாணவிகளுக்கு பல்வேறு விதமான பல்சுவை நிகழ்வுகளை நடத்தினார்கள். விழா ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகம் மற்றும் கல்லூரியல் செயல்படும் பெண்கள் முன்னேற்ற சங்கத்தினர் செய்திருந்தனர்.

**4. கணினி பயன்பாட்டில் துறை**

கணினி பயன்பாட்டியல் துறை சார்பில் ஒருநாள் கருத்தரங்கானது 10.03.2023 அன்று நடைபெற்றது. கருத்தரங்கை கல்லூரி தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் துவங்கி வைத்தார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் தம்பி தங்ககுமரன் அவர்கள் தலைமையுரை யாற்றினார்கள். கல்லூரி நிதிகாப்பாளர் அருட்தந்தை வினு இம்மானுவேல் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். திருவனந்தபுரம் டெக்னோ பார்க்கை சார்ந்த திரு. அலெக்ஸ் மேத்யூ அவர்கள் மாணவர்களுக்கு மென்பொருள்களின் பயன்பாட்டை பற்றியும் பயன்படுத்தும் விதத்தை பற்றி விளக்கமளித்தார்கள். துறைதலைவர் முனைவர் சுரேஸ் சிங் அவர்கள் கருத்தரங்கின் முக்கியதுவத்தை பற்றி விளக்கமளித்தார்.

**5. விளையாட்டு தினம்**

கல்லூரியின் 25-வது ஆண்டு விளையாட்டு தினமானது 18.03.2023 அன்று சூரியகோடு புனித எப்ரேம் ம.சி.க பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. பொன்னப்ப நகர் முதல் சூரியகோடுவரை ஒலிம்பிக் டார்க் ஓட்டம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் தம்பிதங்ககுமரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். கல்லூரிதாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் நிகழ்ச்சியை துவங்கிவைத்தார்கள். கல்லூரி நிதிகாப்பாளர் அருட்தந்தை வினு இம்மானுவேல் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். இந்திய அணியின் கூடைப்பந்து முன்னாள் வீரரும், இரயில்வே துறையின் வணிகவியல் மேற்பார்வையாளருமான திரு. சிவராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு தேசீய கொடியேற்றி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு போட்டியில் வெற்றிபெற்றோருக்கு சான்றிதழல்களையும் கேடயங்களையும் வழங்கினார்கள்.



# MARY MOUNT CBSE SCHOOL
## ANAKKARAI

மேரி மவுண்டு சிபிஎஸ்இ பள்ளியில் ஆண்டு விழாவானது மார்ச் 9, 2023 அன்று மாலை 5.30 மணியளவில் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். பள்ளியின் தாளாளர் அருட்தந்தை பிராங்க்ளின் ஜோஸ் அவர்கள் வரவேற்புரை யாற்றினார். ஜெர்மனி நாட்டை சார்ந்த திரு. பீட்டர்மான், திருமதி சூசன், குமரன்குடி பஞ்சாயத்து தலைவர் திரு. பால்சன், PTA சார்பாக திருமதி விமல் ஜோஸ் ஆகியோர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

பள்ளியின் முதல்வர் அருட்சகோதரி அல்போன்சா அவர்கள் ஆண்டு அறிக்கை வாசித்தார். Ukg மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் மேதகு ஆயர் அவர்களால் வழங்கப்பட்டது. விழாவில் படிப்பு, விளையாட்டு, கலை போட்டி உள்பட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அதனை தொடர்ந்து மாணவ மாணவிகளின் நடனம், பாட்டு, நாடகம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஆசிரியை விமல் நன்றி கூறினார்.

## HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

### பூட்டேற்றி புனித அந்தோணியார் ஆலய திருவிழாவில் பங்கேற்பு...

பூட்டேற்றி புனித அந்தோணியார் ஆலய திருவிழாவின் 9-ம் நாளான 18.02.2023 அன்று நோயாளர்களுக்கான திருப்பலி நடைபெற்றது. சிறப்பு குழந்தைகளை திருப்பலியில் பங்கேற்க பங்குத்தந்தை, அருட்தந்தை ஷிஜின் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார்கள். செல்லங்கோணம் பங்கு அருட்பணியாளர் அருட்தந்தை ஜெனிட்டோ அவர்கள் சிறப்புப் பள்ளி சார்பாக கலந்துகொண்டு மறையுரை நிகழ்த்தினார். திருமதி மரிய றோணிக்கம், திருமதி லீலாபாய் மற்றும் HOM சிறப்புப் பள்ளி மாணவி அபினா ஆகியோர் ஒளி ஏற்றினார்கள். முதல் வாசகம் பெற்றோர் சார்பாக திருமதி சந்தியா அவர்களும், மன்றாட்டுகளை சிறப்பாசிரியை செல்வி டெல்சி மற்றும் திருமதி அஜிதா குமாரி ஆகியோர் வாசித்தார்கள். சிறப்புத் திருப்பலியின் இடையே நோயாளர்கள் நலமடைய நெற்றியில் எண்ணெய் பூசப்பட்டது. பின்னர் அரங்கில் வைத்து நடைபெற்ற நிகழ்வில் கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிரப்பட்டது. தொடர்ந்து பூட்டேற்றி அப்துல்கலாம் இளையோர் மன்றத்தினர் அன்பின் விருந்து ஏற்பாடுகள் செய்து வழங்கினார்கள். சிறப்பு குழந்தைகளும் சீருடைக்கான தொகை உள்ளிட்ட நல உதவிகள் அப்துல்கலாம் மன்றத்தினர் வழங்கி மகிழ்ந்தனர்.





# மறைவட்ட செய்திகள்

## பனச்சமூடு மறைவட்டம்

### பாலர் சபை இயக்க சங்கமம் 2022 – '23

பனச்சமூடு மறைவட்ட பாலர் சபை இயக்க சங்கமமானது 18.02.2023 அன்று புனித அலோசியஸ் தேவாலயம் காஞ்சியோட்டில் வைத்து நடைபெற்றது. காலை 9.30-க்கு அருட்தந்தை ஜோணி ஆல்பர்ட் அவர்கள் கொடியேற்றி விழாவினை துவங்கி வைத்தார். பின்னர் அருட்தந்தை ஜோஸ் மற்றும் அருட்சகோதரர் ஸ்டீபன் தலைமையில் சிறார்களுக்கு செய்கைப் பாடல் சொல்லிக்கொடுக்கப்பட்டது. பின்னர் 'இயேசுவின் கடவுச் சொல்' என்னும் தலைப்பில் வகுப்பு நடைப்பெற்றது. மதிய உணவுக்குப்பின் பொதுக்கூட்டம் மற்றும் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. விழாவில் பனச்சமூடு மறைவட்டத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், பாலர் சபை இயக்க வழிகாட்டிகள் மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைத்து சிறார்கள் கலந்துகொண்டனர். விழாவினை பனச்சமூடு மறைவட்ட பாலர் சபை இயக்குனர் அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்கள் முன்னிலை வகித்து சிறப்பாக வழிநடத்தினார்.

### குருக்கள் கூடுகை

மறைவட்ட குருக்கள் கூடுகையானது 28/03/2023 அன்று தச்சூர்கோணம் தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில் மறைவட்ட வளர்ச்சிக்காக கலந்தாலோசித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. குறிப்பாக ஆலயத்தில் உள்ள ஆவணங்களை பரிசோதிக்கப்படவேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

# ஆயரின் மார்ச் மாத நிகழ்வுகள்



- 1-3 ➢ காதோலிக்கேட் மையத்தில் வைத்து நடைபெற்ற தூய ஆயர் மாமன்ற கூடுகையில் பங்கேற்றார்.
- 4-5 ➢ சிறிவல்லிப்புத்தூரில் வைத்து நடைப்பெற்ற நற்செய்திப் பெருவிழாவை முன்னின்று தலைமையேற்று நடத்தினார்.
- 7 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் பங்கேற்றார்.
- 8 ➢ இலவுவிளை மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 8 ➢ அணக்கரை Mary Mount CBSE பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 10 ➢ கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து நடைபெற்ற மார்த்தாண்ட மறைமாவட்ட இளையோர் இயக்க சிறப்பு தியான கூடுகையை துவங்கி வைத்தார்.
- 11 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற நிதிக்குழு கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.
- 12 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற மரியாயின் சேனை கெமித்சிய விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.



## இம்மாதம் நினைவு கூர


ஏப்ரல் 2023

02 – குருத்து ஞாயிறு (ஓசானா ஞாயிறு)
சமுக வளர்ச்சி தினம்




2

03 – திருப்பாடுகளின் திங்கள்
04 – திருப்பாடுகளின் செவ்வாய்
05 – திருப்பாடுகளின் புதன்
05 – பாஸ்கா வியாழன்
07 – புனித வெள்ளி
08 – புனித சனி



8

லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு
09 – உயிர்ப்புத் திருநாள்
ஹெவோறே வாரம்




09

12 – திருதந்தை புனித யூலியோஸ்
ஆப்ரஹாம் மார் யூலியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
மார் செறாபியோன்
12 – அனைத்து விசுவாச சாட்சிகள்
மார் செமஊன் பெர்ஸாபோயோ




23

16 – புது ஞாயிறு
23 – உயிர்ப்புக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
மார் கீவர்கீஸ்
25 – நற்செய்தியாளர் புனித மாற்கு



25


27 – புனித கிளீட்டஸ்
28 – ஐசக் மார் யுஹானோன் ஆண்டகையின் நினைவு
29 – சியன்னா நகரின் புனித கத்தரீனா
23 – உயிர்ப்புக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
30 – செபதேயுவின் மகன் மார் யாக்கோபு



30

# 26-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஏப்ரல் 8



**மேதகு ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை**
**மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயர்**



MCYM ஆண்டு திட்ட வெளியீடு



MCYM - தலைமைத்துவ பயிற்சி (மலங்கரை பவன், கன்னியாகுமரி)



Eucharistic Ministrees-க்கான அனுமதி வழங்குதல்



மலங்கரை கத்தோலிக்க கல்லூரி



HOM - மருத்துவ முகாம்